செ. கு. எண்: 163 நாள்:19.08.2020

# <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் அறிக்கை - 19.8.2020</u>

ஜம்மு–காஷ்மீரில் இந்திய நாட்டின் எல்லை பாதுகாப்பு படையில் பணியாற்றி வந்த திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், புள்ளவராயன்குடிக்காடு கிராமத்தைச் சேர்ந்த எல்லை பாதுகாப்பு படையைச் சேர்ந்த ஹவில்தார் திரு. திருமூர்த்தி என்பவர் 31.7.2020 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்தவுடனே அவருடைய குடும்பத்திற்கு என்னுடைய இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டேன்.

திரு. திருமூர்த்தி அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கவும் நான் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தேன்.

மேலும், உயிரிழந்த ஹவில்தார் திரு.திருமூர்த்தி அவர்களின் குடும்ப நிலையினை கருத்திற்கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்கவும் நான் தற்போது உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**